தொகுதி - XVI கார்த்திகை- 2016 இதழ் - 3

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
2017

# CINTANAI

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.



**Editor** Professor Selliah Krishnarajah

**Associate Editor** Dr. K.Kajavinthan

**Managing Editor** Dr. S. Santhirasegaram

**Editorial Committee Members**

Dr. K.Shriganeshan
Dr. K.Arunthavarajah
Dr. (Mrs) J. Rasanayagam
..................
Mr. R. Rajeshkannan
Mrs. S. Arulanantham
Mrs. S. Prabaharan



**Annual Subscription** 1500/- SLR / 15US $
Price Per Copy 500/-SLR

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka.

**Printed by** Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna.

**ISSN** **2478 - 1061**

# 1930 - 1958 காலப்பரப்பில் வட இலங்கையின் கல்வி நிலை - ஈழகேசரி வெளிப்படுத்திய கல்விக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

க. அருந்தவராஜா

**ஆய்வுச்சுருக்கம்:**

ஒரு தேசத்தின் வரலாற்றினை சரியாக இனங்காண்பதற்கு உறுதியான, நம்பிக்கையான வரலாற்று மூலங்கள் இன்றியமையாதவை. அதுவும் அவை சமகாலத்தவையாக அல்லது சம்பவம் நடைபெற்ற காலத்தவையாக, அவற்றுடன் தொடர்புபட்டவைகளாக அமைகின்றபோது அத்தகைய வரலாற்று மூலங்கள் வரவேற்கப்படுகின்றன. அவ்வாறு அமைகின்றபோதுதான் அவை குறிக்கப்பட்ட தேசத்தினுடைய வரலாற்றினை உறுதியாகப் பதிவு செய்து வைத்திருப்பதற்கான சாதகமான வாய்ப்பினை ஆராய்ச்சியாளர்களுக்கு ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டின் இடைக்கால யாழ்ப்பாண மக்களது இருப்பினை, அவர்களது வாழ்வியல் முறைகளை வெளிப்படுத்துகின்ற வரலாற்று ஆவணங்களில் ஈழகேசரி என்ற வாராந்தப் பத்திரிகைக்கும் தனியிடமுண்டு. பொதுவாக அக்காலப்பகுதியில் தோன்றிய பத்திரிகைகள் எல்லாமே ஏதோ ஒரு மத, அரசியல் மற்றும் தொழிலாளர்களது பின்னணியினை மையமாகக்கொண்டே தோன்றியிருந்தன. ஆனால் எவ்விதமான மதப் பின்னணியினையோ அல்லது அரசியல், சமூகப் பின்னணியினையோ கொண்டிருக்காமல் தமிழ் பேசும் மக்களது சகலதுறை வளர்ச்சியிலும் அக்கறையினைச் செலுத்துகின்ற ஒரே நோக்குடன் யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையே ஈழகேசரி. இப்பத்திரிகை தான் வெளிவந்த காலப்பகுதியில் (1930 – 1958) காணப்பட்ட அக்கால யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கை மக்களது கல்விநிலை தொடர்பான பல தகவல்களைத் தருகின்றது. பொதுவாகவே இலங்கையானது பல இன மக்களையும் உள்ளடக்கிய பாரம்பரிய கல்வி, பண்பாட்டு நிறுவனங்களுடன் அடையாளம் காணப்படுகின்ற பிரதேசமாகக் காணப்படுகின்றது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் காணப்படுகின்ற இப்பிரதேசத்தினது சமுதாய வளர்ச்சியில் இலங்கை அரசர்களுடைய காலந்தொடக்கம் ஆங்கிலேயரது காலத்தினது முடிவுவரை கல்வியின் முன்னேற்றமென்பது உன்னதமான இடத்தினைப் பெற்றிருந்தமையினை ஆதாரங்கள் மூலமாக அறிய முடிகின்றது. அவ்வகையில் இத்தகைய இலங்கை மக்களது இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தேய கல்வி நிலையின் தன்மைகளை எடுத்துரைக்கின்ற வரலாற்று ஆவணமாகக்கூட நாம் இப்பத்திரிகையினைப் பார்க்கலாம். அதுமட்டுமன்றி இலங்கை மக்களது கல்விநிலையினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளையும்கூட அது அவ்வப்போது தனது பத்திரிகையினது வெளியீடுகளின் ஊடாகத் தெரிவித்தும் வந்தது. இதனது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவை எளிய மொழி நடையில் காணப்பட்டதன் பின்னணியில் இது தரும் தகவல்கள் இலகுவான முறையில் மக்களைச் சென்றடைந்தன. குறிப்பாக சுயமொழிக்கல்வி, இலவசக்கல்வி, சமயக்கல்வி, தொழிற்கல்வி, சர்வகலாசாலையினது உருவாக்கம் என்பவை அக்காலப்பகுதியில் இலங்கை மக்களது கல்வி முன்னேற்றந் தொடர்பாக ஈழகேசரியினது பிரதான குறிக்கோள்களாக அமைந்திருந்தன. இதனைவிட இப்பத்திரிகையானது மாணவர்களது நலன்கள், ஆசிரியர்களது நலன்கள் என்பனவற்றிலும் அக்கறையுடன் செயற்பட்டது. எனவே ஈழகேசரி வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதிக்குரிய இலங்கை மக்களது கல்விக் கட்டமைப்பினை அறிய விரும்புகின்ற எவரும் இப்பத்திரிகையினை விலக்கிவிட்டுச் செல்ல முடியாதென்பதே உண்மை.

**திறவுச்சொற்கள் :** சுயமொழிக்கல்வி, இலவசக் கல்வி, சர்வகலாசாலைத் திட்டம், கைத்தொழிற்கல்வி, பெண்கல்வி.

**1. அறிமுகம்**

உலகில் நாளாந்தம் நடைபெறுகின்ற செய்திகளை மக்களுக்கு வழங்கி வருகின்ற தொடர்பு சாதனங்கள் பல உள்ளன. அது மட்டுமன்றி அவை பல தரத்திலும் அமைந்துள்ளன. இவை பொதுவாக தகவல் தொடர்புச்சாதனங்கள் எனப்படுகின்றன. இவற்றில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பவை முக்கியம் பெறுகின்றன. மேற்கூறப்பட்ட தகவல்தொடர்பு சாதனங்கள் செய்திகளைத் திரட்டுவதையும் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டு மக்களுக்கு சேவை செய்கின்றன. இவற்றில் சாதாரண பாமர மக்களையும் தொட்டணைத்துச் செல்கின்ற தகவல் ஊடகமாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன. இவ்வாறு இது விளங்கக் காரணம் அது செலவு குறைந்த ஒரு சாதனமாக இருப்பதுடன், மிக இலகுவாக கிடைக்கக்கூடியதொன்றாகவும் காணப்படுவதேயாகும். அவ்வகையில் ஒரு பத்திரிகை என்ற அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் ஈழகேசரி தோன்றிய காலமானது ஈழத்தின் அரசியல், சமூகம், வரலாறு பொறுத்து மிகவும் முக்கியம் பெற்றதும் இத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. அரசியல் ரீதியில் டொனமூர் அரசியல் திட்டமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் காணப்பட, சமூக ரீதியில் பழைய சம்பிரதாயங்கள், மரபுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றினைத் தகர்த்தெறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறே பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த வட இலங்கையினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே இத்தகையதொரு பின்னணியில் ஈழகேசரியினது வரவானது இலங்கையில் இடம்பெறுகின்றது. பொதுப்பட இப்பத்திரிகை தோன்றிய காலப்பகுதியிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியிலோ தோன்றிய பத்திரிகைகள் எல்லாமே மதப் பிரசாரத்தினையோ அல்லது தொழிலாளர்களது நலன்களையோ இலக்காகக் கொண்டே தோன்றியிருந்தன. காரணம் அக்காலச் சூழ்நிலை. ஆனால் இப்பத்திரிகையோ இத்தகைய நோக்கங்களிலிருந்து முழுவதுமாக விலகி மதச்சார்பற்று, சமுதாய நலன்களைக் கருத்தில்கொண்டு பணியாற்றியது. தமிழ் பேசும் மக்களை அதிகமாகக் கொண்ட யாழ்ப்பாணப் பிரதேசத்து மண்ணில் தோன்றி அவர்களுக்காகவே தனது இறுதிக்காலம் வரை உழைத்தது ஈழகேசரிப் பத்திரிகை. அக்காலப்பகுதியில் பொதுப்பட கல்வியினது பயனென்பது இலங்கையில் குறிக்கப்பட்ட பிரிவினர்களுக்கு மட்டுமே கிடைத்து வந்தது. இதனால் இலங்கை மக்களுக்கான கல்வியினது தரத்தினைப் பல வழிகளிலும் உயர்த்துகின்ற நோக்குடன் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடமும் மக்களிடமும் முன் வைத்த இப்பத்திரிகை அதற்காகத் தனது வெளியீடுகளின் மூலமாகவும் போராடியது. அவ்வகையில் அக்கால இலங்கை மக்களது கல்வி நிலை பற்றிய பல அரிய தகவல்களை அதுவும் குறிப்பாக வட இலங்கை மக்களது இப்பத்திரிகையின் வாயிலாக அறிந்து கொள்ளமுடியும். அவ்வகையில் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலத்திற்கான (1930 - 58) இலங்கை மக்களது கல்வி நிலையின் தன்மை பற்றி அறிவதற்கு உதவுகின்ற முக்கியமான ஆதாரமாகவும் ஈழகேசரி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஈழகேசரிப் பத்திரிகையினது தோற்றம்**

1930 ஆம் ஆண்டு காலப்பகுதியினை அடுத்த சுமார் 25 வருட காலப்பகுதியினை அறிஞர்கள் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பத்திரிகைக் காலம் என்பர். (சுப்பிரமணியம். நா. 1987, ப.169) இத்தகையதொரு பத்திரிகைக் காலத்தினைத் தனக்குள் உள்ளடக்கிய வகையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவர ஆரம்பிக்கின்றது. தென்னிந்தியாவில் பத்திரிகைக் காலங்களை மணிக்கொடிக்காலம், சரஸ்வதிகாலம் எனக் குறிப்பிடுவதனைப் போன்று ஈழத்திலும் தனக்கென ஒரு காலப்பகுதியினை ஏற்படுத்தி அது சிறிய காலமெனினும் அக்காலகட்டத்திலே

புதுமைகள், புரட்சிகள் செய்து நினைவில் நிற்பது ஈழகேசரியே என்றால் மிகையாகாது. 1930 யூன் 30 இல் தனது வார வெளியீட்டினை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இப்பத்திரிகையானது தொடர்ந்து 1958 வரை 28 வருடங்கள் சிறப்பாகத் தனது பணிகளை தமிழ் பேசும் மக்களுக்காகச் செய்து வந்தது. இப்பத்திரிகையானது நா.பொன்னையா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய சொந்த அச்சகமான சுன்னாகத்தில் அமைந் திருந்த திருமகள் அழுத்தகத்திலிருந்து வெளி வந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வாராந்தப் பத்திரிகையாக இருந்தாலும்கூட அக்காலத் தமிழ் மக்களது சகலதுறை வளர்ச்சியிலும் பெரும்பங்கினை ஆற்றியிருந்தமை பாராட்டத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற முதலாவது பிரதேசப் பத்திரிகையாகக் கருதப்படுகின்ற இப்பத்திரிகை அரசியல் சூழலை ஏனைய சூழலிலிருந்து பிரித்துப் பாராமல் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப் பண்பாட்டுச் சூழலுடன் ஒருங்கிணைத்துப் பார்த்ததென்றே கூறுதல் வேண்டும். எந்த ஒரு அரசியல் கட்சியினது பின்னணிகூட இதற்குக் கிடையாது. (உதயன், 2002 மார்ச்சு 18, ப. 03) தொடக்கத்தில் இது ஒரு வாராந்தப் பத்திரிகையாகப் புதன்கிழமைகளில் வெளிவந்தது. பின்னர் இது 1933 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரத் தொடங்கியது. அவ்வகையில் தொடர்புசாதன வசதிகள் குறைந்த அக்காலத்தில் ஈழகேசரியின் சேவை அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. ஈழகேசரி புதினங்களை வெளிப்படுத்துகையில், மிகவும் சிறப்பான முறையில் அதனை விளங்கவைக்கின்ற தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. புதினங்களில் உள்ளூர் புதினங்களுக்குத்தான் அதிகளவு முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஈழகேசரிப்பத்திரிகையானது தனியே யாழ்ப்பாணத்தில் மட்டும் வாசகர் வட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. அது தென்னிலங்கையிலும், கிழக்கு மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலும் தனது வாசகர்களைக் கொண்டிருந்ததுடன் கடல் கடந்து, இந்தியா, பர்மா, மலாயா போன்ற நாடுகளிலும் கூட யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் செய்திகளை தெரிவிக்கின்ற ஊடகமாகக் காணப்பட்டது. தமிழர் வாழ்கின்ற பகுதிகளிலுள்ள செய்தி களைக் கொழும்பு நிருபர் கடிதம், கிழக்குத் தபால், மலையகச் செய்திகள் போன்ற பல தலைப்புக்களின் கீழ் வெளியிட்டு வந்தது.

**ஈழகேசரி காட்டும் யாழ்ப்பாணக் கல்விநிலை**

ஈழகேசரியும் வெளிவந்த காலத்தில் ஈழ த்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய மாற்றங் களேற்பட்டன. இத்தகைய மாற்றங்கள் பெரு மளவுக்கு நாட்டு மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டன. இத்தகைய முன்னேற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் ஈழகேசரியின் பங்களிப்பும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் அமைந்திருந்தன. சுயமொழிக்கல்வி, இல வசக்கல்வி, சமயக்கல்வி, தொழிற்கல்வி, சர்வகலாசாலையின் தோற்றம் இவை போன்ற பல முன்னேற்றங்கள் யாழ்ப்பாண அக்கால சமூகத்தில் ஏற்படுவதற்கு இப்பத்திரிகை போராடி வந்தது. அதுமட்டுமன்றி ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்களில் அக்கறைகொண்டு செயற்பட்டதுமன்றி பெண்கள் கல்வி முன்னேற்றத்திலும் பிற்பட்ட காலங்களில் மிக அக்கறையுடன் உழைத்து வந்தது. அவ்வகையில் மேற்கூறப்பட்ட விடயங்கள் பற்றிய செய்திகள் பல இதன் வெளியீடுகள் பலவற்றில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயரின் ஆட்சியில் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் நாட்டின் கல்வித்துறையைப் பொறுத்துப் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அதுமட்டுமன்றிக் கிறிஸ்தவ மிஷனரிகளின் நடவடிக்கைகளும் இப்பகுதிகளில் பெருமளவிற்கு முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டன. அவர்களது

பாடசாலைகள் மதம் பரப்பும் நிலையங்களாக விளங்கியதுடன் ஆங்கிலமொழி மூலக் கல்வி போதனாசாலைகளாகவும் அவை திகழ்ந்தன. (சத்தியசீலன் , ச., 1994, ப.74) யாழ்ப்பாணப் பகுதியைப் பொறுத்து அமெரிக்கமிஷனரிகளின் பங்களிப்புக்கள் இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்துக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையிலமைந்திருந்தன. மேலும் ஆங்கிலேயர்கள் இப்பிரதேசங்களில் கல்வியை விரிவுபடுத்தும் நோக்கில் சுயமொழிப் பாடசாலை முறை ஒன்றையும் ஆரம்பித்தனர். இவற்றைவிட இருமொழிப் பாடசாலைகளும் இப்பிரதேசங்களில் காணப்பட்டன. (சந்திரசேகரம், சோ., 1977, ப.88)

20 ஆம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்த காலங்களிலும் கல்வி முறையிலே பெரும் விரிவு ஏற்படுத்தப்பட்டது. அவ்வகையில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் வெளிவர ஆரம்பித்த ஈழகேசரியானது அதன் ஆரம்பகால வெளியீடொன்றில் இலங்கையின் கல்வி தொடர்பாகப் பின்வரும் கருத்தினை முன்வைக்கிறது.

“மக்களின் அறியாமையென்னும் அகவிருளை அகற்றி அறிவைப் பெருக்கு வதற்கும் பிறவியினால் பெற்ற பயனை நுகர்வதற்கும் வேண்டப்படுவது கல்வியேயாம். மக்களின் உடல் நலத்திற்கு உணவு எவ்வாறு வேண்டப்படுகின்றதோ அவ்வாறே அறிவின் ஆதிக்கத்திற்குக் கல்வியும் வேண்டப்படும்” (ஈழகேசரி, 1930 ஜூலை 09, ப.01)

இச்செய்தியே ஈழகேசரியில் கல்வி தொடர்பாக முதலில் வெளிவந்த செய்தியாகும். ஆங்கிலேயரின் ஆட்சியின் தொடக்க காலங்களில் கோல்புறூக் ஆணைக்குழுவினர் தெரிவித்த கல்விசார் கருத்துக்களும் முன்மொழிந்த ஆலோசனைகளும் இலங்கையின் கல்வி வரலாற்றில் எல்லைக்கற்களாக அமைந்தன. (ஆறுமுகம், வ., 1983, ப,89) இலங்கை யில் டொனமூர் அரசியல் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கல்வி வளர்ச்சிக்கான சில முக்கிய அடித்தளங்களுமிடப்பட்டன. (சந்திரசேகரம், சோ., 2000, ப.248) நாட்டின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுழைத்த ஈழகேசரி நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆபத்து வருகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் அது தனது கண்டனத்தை தெரிவிக்கவும் தவறவில்லை. எடுத்துக்காட்டாக 1931 இல் அரசாங்கத்திற்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதனைத் தொடர்ந்து மாற்றீடாக அரசாங்கமானது பலதுறைகளுக்கும் ஒதுக்கிக் கொண்ட செலவைக் குறைப்பது தவறெனச் சுட்டிக்காட்டியது. (ஈழகேசரி, 1931 பெப்ரவரி 11, ப.02)

கல்வி அமைச்சரால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் சமூகத்திற்கு நன்மை விளைவிக்குமெனில் அதனை ஆதரித்தும் தீமை விளைவிக்குமெனில் அதனை எதிர்த்தும் தனது கருத்துக்களை இப்பத்திரிகை கூறிவந்தது. குறிப்பாக 1931 இல் கல்வி அமைச்சர் பிறப்பித்த ஒரு சட்டமானது அதுவரை காலமும் பாடசாலை முகாமைக்காரராலே ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சம்பளம் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக வித்தியா சங்க காரியஸ்தர்களால் சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. மேலும் அச்சட்டம் 5 ஆம் வகுப்புவரை சுயபாஷா கல்வி ஏற்பட வேண்டுமெனவும் சமய வேறுபாடுகளின்றி அனைத்து மாணவர்களும் பாடசாலையில் சேர்க்கப்படலாம் எனவும் கூறியது.

இச்சட்டத்தை ஆதரித்த ஈழகேசரி இவ்விடயந் தொடர்பாகத் தனது கருத்தை பின்வருமாறு முன்வைத்தது.

“கல்வி மந்திரி அதிக அனுபவத்துடன் தேச முன்னேற்றத்தையும் கல்வி அபிவிருத்தியையும் ஒருங்கேகருதி அமைத்துள்ளபுதியஒழுங்கினைக் கொண்ட வித்தியா சட்டம் மேலும் மேலும் நன்மைக்காகும் திருத்தங்களுடன் அரசாங்க சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு விரைவில்

அனுட்டானத்திற்கு வருமென்பதே எமது நம்பிக்கை" (ஈழகேசரி, 1931 டிசெம்பர் 23, ப.02)

**சுயமொழிக் கல்வி**

அன்னிய மொழியொன்றினைப் போதனா மொழியாகப் பிரயோகிப்பதன் பயனின்மையை 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே கல்விமான்கள் ஏற்றுக்கொண்டனர். (பிரேமரத்னா, போகொட., 1969, ப.664) அவ்வகையிலே இந்நூற்றாண்டின் இறுதியில் தேசிய மொழிகளைக் கல்வியின் ஆரம்பநிலையிலேயே புகுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேசிய மொழிகளில் கல்வியூட்டுவதற்கென கிராமப் பாடசாலைகள் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டது. இந்நிலையில் தேசிய மொழிகளைச் சகல பாடசாலைகளிலும் புகுத்துவதற்கு இலங்கைச் சமூகச் சீர்திருத்தச்சங்கம் 1908 இல் தேசாதிபதியிடம் ஒரு குழுவையும் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இலங்கையில் சுயமொழிக் கல்விக்கான போராட்டங்கள் நடந்த வண்ணமேயிருந்த அதேவேளை அதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டே வந்தன. 1911 இல் தேசிய மொழிக்கல்விக்குச் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகளை ஆராய்வதற்கென ஒரு கல்விக் குழு உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் கல்வித்துறையிலே தேசிய மொழிக்கு உரிய இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் இரண்டு வழிகளில் நடைபெற்று வந்தமை நோக்கத்தக்கது. ஆங்கிலப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் தேசிய மொழிகள் புகுத்தப்படவேண்டுமென்பது ஒன்று. மற்றையது சகல பாடசாலைகளிலும் தேசிய மொழிகளையே பொதுக்கல்வியின் போதனா மொழியாகப் பயன்படுத்துவதாகும். (பிரேமரத்னா, போகொட., 1969, ப.664)

ஈழகேசரி சுயமொழிப்போராட்டம் உச்ச நிலையை அடைந்த காலப்பகுதியில் வெளிவந்த பத்திரிகையாதலால் இவை தொடர்பான பல செய்திகள் இதில் காணப்படுகின்றன. அவ்வகையில் இப்பத்திரிகையானது தொடக்ககால வெளியீடொன்றில் சுயமொழிக் கல்வி பற்றிப் பின்வரும் கருத்தினை வெளியிட்டிருந்தது.

"நமது நாடுகளில் உண்மைக் கல்வி பரம்பி உயர்ந்த அதிகாரத்தையடைய வேண்டுமானால் நாம் உயர்தரமான கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கால் தாய்பாஷையை உபயோகிக்க வேண்டும்" (ஈழகேசரி, 1934 ஜனவரி 07, ப.08).

அக்காலப்பகுதியில் பல பாடசாலைகளில் ஆங்கிலமொழியுடன் கல்வி போதிக்கப்பட்டதனால் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். குறிப்பாக அச்சமயத்தில் போதிக்கப்பட்ட கல்வியினை இலகுவில் சில மாணவர்களால் புரிந்துகொள்ள முடியாதிருந்தது. அந்நேரத்தில் அவர்கள் அன்னிய மொழியில் பரிட்சியம் பெற்றவர்களாகக் காணப்படவுமில்லை. பெரும்பாலான பெற்றோர்களது நிலையும் அதுவாகவே இருந்தது.

1920 தொடக்கம் இந்தியாவில் "சுயபாஷா இயக்கம்" ஆரம்பிக்கப்பட்டதன் தாக்கமே இலங்கையிலும் இக்காலப்பகுதியில் இக்கோரிக்கையானது வேகமாகப் பரவுவதற்குக் காரணமாகியது. இத்தகைய சுயபாஷா இயக்கத்திற்கு முழு ஆதரவையும் கொடுத்தவர்களாக வடமாகாண ஆசிரியர் சங்கத்தையும் தென்மாகாணங்களில் வாழ்ந்த கல்விச் சீர்திருத்தவாதிகள் சிலரையும் குறிப்பிடலாம். (முகம்மது சமீம், அ., 1998, ப.168)

சுயமொழியில் கல்வியினைக் கற்பதில் அக்காலத்தில் சில முக்கிய பிரச்சினைகள் காணப்பட்டன. அவற்றிலொன்று சுதேச மொழியில் போதியளவு பாடப்புத்தகங்கள் காணப்படாமையாகும். எனவே இதனைக் காரணமாகக் கொண்டு இக்கல்வியை காலந்தாழ்த்தக்கூடாது எனக் கூறுகின்ற ஈழகேசரி அன்னிய பாஷை நமது

கல்விக்கு ஆதாரமாக நிற்கும் வரையும் கல்வி கற்ற வருக்கும் கல்வி கற்காத பாமர மக்களுக்கிடையிலும் பாரிய இடைவெளி இருந்தே வரும் என்ற கருத்தைத் தனது வெளியீடொன்றில் முன்வைக்கின்றது. (ஈழகேசரி, 1937 பெப்ரவரி 28, ப.08)

1931 அளவில் கல்வி தொடர்பாகவொரு பிரேரணை இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி 5 ஆம் வகுப்புவரை தாய்பாஷைக் கல்வி கற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென அதில் கூறப்பட்டிருந்தது. எனினும் இதனை நமது நாட்டைச் சேர்ந்த சிலர் விரும்பவில்லை. இவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி இதனை நிராகரிக்கவும் முற்பட்டனர். தேசியமொழிக் கல்வியை எப்பொழுதும் ஆதரித்துவந்த ஈழகேசரி இவர்களின் இத்தகைய நடவடிக்கையைக் குறைகூறுகின்றது.

இப்பத்திரிகை தொடக்கத்தில் சுயமொழிக் கல்வியைக் கற்றுக்கொடுப்பதில் பல சிரமங்கள் காணப்படுமெனவும் எனவே அரசாங்கமும் மக்களும் இவ்விடயத்தில் ஒத்துழைத்தால் பின்னாளில் நன்மையேற்படும் எனவும் தொடர்ந்து பல வெளியீடுகளில் கூறிவந்தது.

1952 இல் இலங்கை அரசாங்கத்தினால் கல்வி தொடர்பாகப் பலதிருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றில் 1953 ஆம் ஆண்டிலிருந்து 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்குத் தாய்மொழிக்கல்வி கற்பிப்பது பற்றிக் கூறப்பட்டிருந்தது. இதற்கு வித்தியாசாலை அதிபர்கள் மத்தியிலிருந்து பல எதிர்ப்புக்கள் தோன்றின. பொதுவாகக் கொழும்பிலிருந்த ஆங்கிலக்கல்லூரி அதிபர்கள் சிலர் இதனை விரும்பவில்லையென்றே கூறவேண்டும்.

இந்நிலையில் சுயமொழிக் கல்வி தொடர்பான விடயங்கள் காலந் தாழ்த்தப்பட்டுப் போவதனைத் தொடர்ந்து ஈழகேசரி தனது வெளியீடொன்றில் பின்வரும் கருத்தை இவ்விடயமாக முன்வைத்தது.

"காலம் நீடித்தாலும் கஷ்டங்கள் தோன்றினாலும் தாய்மொழி மூலமே கல்வி கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இதனை நமது அரசினர் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. ஆங்கில மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பது பற்றி எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனால் அம்மொழிக்கு முதன்மை தேவையில்லை." (ஈழகேசரி, 1953 நவம்பர் 15, ப.06)

எனவே பொதுப்பட நோக்கின் ஈழகேசரி ஆங்கிலமொழியை முற்றாக ஒதுக்கவில்லையென்பதும் தேசிய மொழிக்கு முதன்மையளிக்க வேண்டுமென்பதையும் விரும்பியதனை உணரமுடிகின்றது. அவ்வகையில் அது பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை சுயபாஷைக் கல்வியையே ஆதரித்து நின்றது. அது இவ்விடயமாகத் தனது விருப்பத்தை ஓரளவுக்குப் பூர்த்தி செய்து கொண்டாலும் 1960 ஆம் ஆண்டின் பின்பே பல்கலைக்கழகங்களிலும் கல்வி சுயபாஷையில் போதிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டதனையும் அவதானிக்க முடிகின்றது. எனவே சாதாரண மக்களும் கல்வியின் மகத்துவத்தினை உணரவும், புரிந்து கொள்ளவும் ஈழகேசரி சுயமொழிக் கல்வியினை எப்போதும் ஆதரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**இலவசக்கல்வி**

சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவினால் 1945 ஆம் ஆண்டளவில் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியானது இலங்கையின் கல்வி வரலாற்றில் மட்டுமல்ல அரசியல் பொருளாதார சமூக வரலாற்றிலும் பாரிய நன்மையை ஏற்படுத்தியதெனலாம். (சத்தியசீலன், ச., 1994, ப.78) இலவசக் கல்வித் திட்டத்தின் மூலமே ஆங்கிலக்கல்வி கற்ற உயர் வர்க்கத்தினருக்கும்தாய்மொழிமூலம்கல்விகற்ற மக்களுக்கும் இடையிலே காணப்படுகின்ற வேற்றுமையினை அகற்றலாமெனக் கருதிய கன்னங்கராவினால் அரசாங்கசபையில் 1944 இல் இவ்விடயம் தொடர்பாக ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது.

இம்மசோதாவில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.

1. எல்லா அரசாங்க உதவி பெறுகின்ற பாடசாலைகளிலும், அரசாங்க ஆரம்ப உயர்கல்விப் பாடசாலைகளிலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும், அரசாங்க பொறியியல் விவசாய வர்த்தகப் பாடசாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும் கல்விக்கான கட்டணம் அறவிடக் கூடாது.
2. அரசாங்க நன்கொடைபெறும் ஆரம்ப உயர்கல்விப் பாடசாலைகளிலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், கடமையாற்றும் ஆசிரியத் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப சம்பளம் அரசாங்க நிதியிலிருந்து கொடுக்கப்படும்.
3. அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குத் தளபாடங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையை அரசாங்கம் கொடுக்கும். ஆனால் இப்பாடசாலைகள் விளையாட்டுக்கென ஒரு சிறிய கட்டணத்தை அறவிடாலாமேயொழிய வேறு எவ்விதமான கட்டணத்தையும் அறவிடமுடியாது. (முகம்மது சமீம், அ., 1998,ப,241)

சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா கொண்டுவந்த இத்திட்டத்திற்கு டி.எஸ். செனநாயக்கா மற்றும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதுமட்டுமன்றி இவ்வித திட்டத்தைப் பிற்போடவும் முற்பட்டனர் என்றாலும் இறுதியில் கன்னங்கராவே வெற்றி பெற்றார். நமது நாட்டின் கல்வி வளர்ச்சியில் இதனை ஒரு மைல் கல்லாகக் கருதும் சோ. சந்திரசேகரம் இலவசக்கல்வியும் தாய்மொழிக் கல்வியும் சாதாரண மக்கள் இடைநிலைக் கல்வியையும் உயர் கல்வியையும் பெறுவதிலிருந்த பொருளாதாரத் தடைகளையும் நீக்கினார் கன்னங்கரா எனக் குறிப்பிடப்படுவது பொருத்தமானதே. (சந்திரசேகரம், சோ., 2000, ப.248)

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் நாட்டின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களில் இலவசக்கல்வியும் ஒன்று. இதன் காரணமாக இலவசக்கல்வி தொடர்பாகவும் அதற்கான முயற்சிகள் மேற்கொண்ட வரலாற்றையும் இப்பத்திரிகையினூடு அறிந்து கொள்ள முடிகின்றது. அவ்வகையில் இலவசக்கல்வி தொடர்பாக ஈழகேசரியில் வெளிவந்த முதல் செய்தி அதன் ஆசிரியத் தலையங்கத்திலே காணப்படுகின்றது. அதில் இலவசக்கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா முயற்சி செய்வதாகவும் இவருடன் வித்தியாகர்த்தர் எச். எஸ். பெரேரா மிக்க ஆர்வங் காட்டுவதாகவும் முயற்சி செய்வதாகவும் இதற்கென நான்கு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் அது தொடர்ந்து கூறும்போது இலவசக்கல்வி வழங்கப்படுமாயின் நாடு உயர்நிலையை அடைவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறுகின்றது. (ஈழகேசரி, 1944 மார்ச்சு 12, ப.04)

பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக் கழகம் வரை இலங்கையிலேதான் முதலில் இலவசக்கல்வி ஆரம்பமானது. எனவே தொடக்கத்தில் இத்திட்டத்திற்குள் வருவதற்குச் சில பாடசாலைகள் தயக்கம் காட்டின. அதேநேரத்தில் 200 பாடசாலைகள் வரை இத்திட்டத்திற்குள் உடனே வந்துவிட்டன என்பதும் அவதானிக்கத்தக்கது. ஆரம்பத்தில் 60 பாடசாலைகளேதான் இத்திட்டத்திற்குள் வருவதற்குத் தயக்கம் காட்டின. எனவே இவ்வாறான பாடசாலைகள் மூன்று வருடங்களுக்குள் இத்திட்டத்திற்குள் வரவேண்டுமெனவும் அச்சமயத்தில் அரசாங்கத்தினால் கட்டளையிடப்பட்டிருந்தது.

இலவசக்கல்வி நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே அரசாங்கப் பாடசாலைகளும் சுயமொழிக்கல்வியை இலவசமாகவே வழங்கி வந்தன. (சந்திரசேகரம், சோ., 1977, ப,100) இவ் இலவசக் கல்வி முறையானது கட்டணம் அறவிட்டுவந்த அரசாங்க உதவி பெற்ற ஆங்

கிலப் பாடசாலைகளையும், பல்கலைக் கழகம், தொழில்நுட்ப பாடசாலை ஆகிய கல்வி நிலையங்களையும் சுயமொழிப் பாடசாலைகள் போன்று இலவசக்கல்வியை வழங்குகின்ற நிலைக்கு கொண்டு வந்ததெனலாம். எனவே அதுவரை வறுமை நிலையிலிருந்த மாணவர்கள் ஆங்கிலக்கல்வியைப் பெற்றுக்கொள்வதிலிருந்த பொருளாதாரத்தடைகள் இதனால் ஓரளவு நீக்கப்பட்டனவென்றே கூறவேண்டும்.

அந்நேரத்தில் இலவசக் கல்வித்திட்டத்தை எதிர்த்தவர்களில் கிறிஸ்தவக் குருமார்களும் ஒரு பிரிவினராகக் காணப்பட்டனர். இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் ஏற்படவுள்ள சிக்கல்கள் தொடர்பாக செண். பற்றிக்ஸ் கல்லூரி அதிபராக அச்சமயத்தில் இருந்த அகஸ்ரினுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டமொன்றில் அவர் ஆற்றிய உரையின் சில பகுதிகளை ஈழகேசரி பின்வருமாறு பிரசுரித்திருந்தது.

“இலவசக்கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து செண். பற்றிக்ஸ் கல்லூரியின் நலன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கத் தோலிக்கர்கள் ஒற்றுமையாக இருக்கும் காலம் வந்துவிட்டது. நமது ஐக்கிய வாழ்வை சிதைக்க விரோதிகள் வேலை செய்து வருகின்றனர். நாம் ஒற்றுமையாக இருந்தால் நமது மதத்திற்கு பாதகமான சட்டங்களை இயற்ற அவர்கள் அஞ்சுவார்கள்.” (ஈழகேசரி, 1946 யூன் 23, ப.43)

கிறிஸ்தவர்களின் வாக்குகளைப் பெருமளவிற்கு நம்பியிருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம், அ. மகாதேவா, சிறிபத்மநாதன் போன்ற அரசியல் தலைவர்கள்கூட ஆரம்பத்தில் இத்திட்டத்தை எதிர்த்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இலவசக் கல்வித் திட்டத்தினால் நன்மையடைந்தவர்களாக பணக்கார வர்க்கத்தினரே பெருமளவிற்குக் காணப்பட்டனர். 1942 ஆம் ஆண்டு வரை கட்டணத்தைச் செலுத்திக் கல்வி கற்ற உயர்வர்க்கத்தினருக்கு தற்போது கட்டணம் செலுத்தாமலே கல்வி கற்கின்ற வாய்ப்புக் கிட்டியது. கிராமப் புறங்களிலும் மத்திய கல்லூரிகளை நிறுவிப் பாமர மக்களுக்கும் உயர் கல்வியை வழங்கவேண்டுமென்ற கன்னங்கராவின் நோக்கம் அரசின் பணப்பற்றாக்குறையினால் சில சந்தர்ப்பங்களில் பாதிக்கவும் செய்தது.

இலவசக் கல்வித் திட்டத்தில் ஏற்பட்ட முக்கியமானதொரு பிரச்சினை மாணவர் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்த முடியாததாகக் காணப்பட்டது. அதாவது இத்திட்டத்தின் மூலமாக ஆங்கிலப் பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களின் தொகையானது அதிகரித்துக்கொண்டே வந்தது. அதேநேரம் தேசிய பாடசாலைகளில் மாணவர் தொகையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியாத ஏழை மாணவர்களுக்கும் ஆங்கிலம் கற்கின்ற வாய்ப்பு ஏற்பட்டதனால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டன. உயர்தர வகுப்புகளுக்குப் பெரும்பாலும் மாணவர்கள் ஆங்கில வித்தியாசாலைகளை நாடுகின்ற சூழ்நிலைதான் அக்காலத்தில் காணப்பட்டது. உண்மையில் இத்தகைய நிலைக்குக் காரணம் தம்மை உயர்வான அந்தஸ்துள்ளவராகக் காட்டிக்கொள்வதற்கும் வேலை வாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளுவதுமே.

ஈழகேசரி 1951 இல் வெளியிட்ட தனது வெளியீடொன்றில் இலவசக் கல்வியின் பின்னர் ஏற்பட்ட பாதகமான நடவடிக்கையென ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. அதாவது 6 வருடங்களாகப் பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி போதிக்கப்பட்டதெனவும் ஆனால் தற்போது மாணவர் வசதி நிதியென்ற பெயரில் கல்லூரி அதிபர்கள் மாணவர்களிடம் பணம் சேகரிப்பதாகவும் குறைகூறுகின்றது. (ஈழகேசரி, 1952 ஓகஸ்ட்

26, ப.04) இந்நடவடிக்கை இலவசக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற நிகழ்வாக ஈழகேசரி கருதியது. அவ்வகையில் இலவசக் கல்வியை ஆதரித்துக்கொண்ட இப்பத்திரிகையானது அக்கல்வியின் அவசியத்தையும், அது நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் காலத்துக்குக் காலம் எடுத்துக்காட்டி வந்தது.

**மதக்கல்வி**

ஈழகேசரி வெளிவந்த காலகட்டத்தில் மதக்கல்வி என்பது அவசியமானதொரு கல்வியாகக் காணப்பட்டது. அன்னிய மொழியையும், அன்னிய மதக்கல்வியையும் மக்கள் நாடிநின்றவேளை ஒவ்வொரு சமயத்தவரும் தமது மதக்கல்வியை பேண வேண்டிய சூழ்நிலையில் இப்பத்திரிகை சமயக்கல்வி பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சமயக்கல்வி பற்றிய பல செய்திகளையும் மக்களுக்கு வழங்கியது. உண்மையில் இப்பத்திரிகையானது முன் பொரு இடத்தில் குறிப்பிட்டதனைப் போன்று மதச்சார்பற்ற பத்திரிகையாகக் காணப்பட்டபோதுங்கூட தனது கடமைகளி லொன்றாக அவரவர் மதங்களைப் பேண வேண்டியதன் அவசியத்தினையும் அதனு டன் தொடர்பான கல்வியினைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தினையும் எடுத்துக் காட்டி வந்தது.

19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில்மதரீதியானகல்விநிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகமாகக் காணப் பட்டன. எனவே இந்நூற்றாண்டுகளில் இலங்கையின் கல்வி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய அமைப்புகளாக மத நிறுவனங்களைக் குறிப்பிடலாம். (சந்திரசேகரம், 1975, ப,05) அமெரிக்க மிஷன், கத்தோலிக்க மிஷன், ஆங்கில சேர்ச் மிஷன், வெஸ்லியன் மிஷன் போன்றன இவற்றுள் முக்கியமானவை. அவ்வகையில் இக்காலப்பகுதியில் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் சைவப் பெரியார்களும், சமய நிறுவனங்களும் சமயப்பாடசாலைகளை நிறுவித் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு உகந்த கல்வியை வழங்க முற்பட்டனர். இப்பின்னணியில் சைவக் கல்வி பெற்றுக்கொண்ட புத்துணர்ச்சியே 20 ஆம் நூற்றாண்டிலேற்பட்ட கல்வி வளர்ச்சிக்கு வித்தாக அமைந்து கொண்டதெனலாம்.

அன்னியராட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக் கல்வியானது இருள் சூழ்ந்து கிடந்த நேரத்தில் சைவக் கல்வியின் பாதுகாவலர்களாகப் பணியாற்றிய பெருமை கோவில், மடங்கள், திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்கே உண்டு. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணக் கல்வியின் புத்தெழுச்சியானது யாழ்ப்பாணத்தவர்களின் சமூக மேல்மட்டத் தாரிடம் ஒரு விழிப்புணர்வை உண்டாக்கியது.

அவர்களை இருபணிகள் பொதுவாக எதிர்பார்த்தன.

1. மதமாற்றத்தைத் தடுத்தல்
2. சைவக் கருத்துக்களையும் அவற்றின் மேம்பாட்டையும் மக்கள் மத்தியில் பரப்புதல். (ஆறுமுகம், வ., 1999, ப.07)

19 ஆம் நூற்றாண்டிலிருந்து சைவக்கல்வியின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய பெரியார்கள், மத நிறுவனங்கள் என்பவை சைவத் தமிழர்கள் வரலாற்றில் மறக்க முடியாதவர்கள். இவர்களில் ஆறுமுகநாவலருக்குத் தனியிடமுண்டு. சைவ சாஸ்திரங்களுக்கான பாடநூல்களை எழுதியும் அவற்றினை அச்சிட்டு வெளியிட்டும் சைவக் கல்விப்பணியை இவர் மேற்கொண்டார். (முருகையன், இ, 1979, ப.21) தெற்கில் அநகாரிக தர்மபாலாவைப் போல வடக்கில் ஆறுமுகநாவலரென பேராசிரியர் ஒருவர் ஆறுமுகநாவலரின் சைவக் கல்வி தொடர்பான பணி பற்றி ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார். (ஆறுமுகம், வ., 1999, ப.07)

ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து வைத்தி யலிங்கம் செட்டியார், சிறாப்பர் குருநாத முதலியார், சேர். பொன். இராமநாதன், பாவலர் துரையப்பாப்பிள்ளை, மளவராயர் கந்தையா உபாத்தியாயர் போன்றவர்களின்

பணி சைவக் கல்வியின் வளர்ச்சியில் பாராட்டப்படத்தக்கன. இவ்வாறே 1888 இல் உருவாக்கப்பட்ட சைவாவிருத்திச்சங்கத்தையும் சைவக் கல்வியின் பாதுகாவல் நிறுவனங்களாகக் குறிப்பிடவேண்டும். ஈழகேசரி வெளிவந்த காலத்திலும் இவற்றின் பணிகள் தொடர்ந்தமையால் இப்பத்திரிகையில் இவை பற்றிய செய்திகளைக் காண முடிகின்றது.

அவ்வகையில் சைவக்கல்வி தொடர்பாகப் பல செய்திகள் ஈழகேசரியில் காணப்படுகின்றன. அவை கட்டுரை, கடிதங்கள், செய்திகள் வடிவில் உள்ளன. அக்காலத்தில் சைவப் பாடசாலைகளைப் புறக்கணித்துவிட்டு பிள்ளைகளைப் பல்வேறு நன்மைகளின் பொருட்டுக்கிறிஸ்தவ பாடசாலைகட்கு அனுப்புகின்ற வழக்கம் பரவலாகப் பெற்றோர்களிடம் காணப்பட்டது. இத்தகைய நிலைமையானது இலங்கையில் சைவசமயத்தவர்களிடம் மட்டுமன்றி வேறு சில மதத்தவர்களிடமும் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைக் குறைகூறும் கா.சின்னப்பாப்பிள்ளை என்பவர் தனது கருத்தை இப்பத்திரிகையில் பின்வருமாறு முன்வைக்கின்றார்.

"சைவக் கலாசாலைகட்கு அதிபராக இருக்கும் சில சைவப்பிரமுகர்கள் தங்கள் உறவினர்களின் பிள்ளைகளைத் தங்கள் வித்தியாசாலைகளில் கற்கும் பிள்ளைகளை கிறிஸ்தவரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். இதிலும் பார்க்க இழிவான செயல் வேறு எதுவுமில்லை." (சின்னப்பாப்பிள்ளை, க., ஈழகேசரி 1930 யூலை 16, ப.04)

இச்செய்தியானது 20 ஆம் நூற்றாண்டின் மூன்று தசாப்தங்களுக்குப் பின்னரும்கூட சைவக்கல்வியானது பல போட்டிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றது. இக்காலத்தில் தமிழர்கள் சிலர் அன்னிய நாகரிகத்தில் ஆர்வங்காட்டியது மட்டுமன்றி சைவக்கல்வியையும் பிற்போக்கான கல்வியென நகையாடினர். மேலும் சிவ சின்னங்கள் அணிதல், ஆலயம் செல்லுதல், நமஸ்காரம் செய்தல் போன்றவற்றையும் அவர்கள் கிண்டல் செய்ததனை அறிந்து கொள்ள முடிகிறது. (ஈழகேசரி 1934 ஜனவரி 07, ப.07)

1947 இல் புதிய கல்விச்சட்டம் அரசாங்க சபைகளில் விவாதிக்கப்பட்டது. இச்சட்டத்திற்குக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தமது கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தனர். இத்திட்டத்திலுள்ள சில அம்சங்கள் கிறிஸ்தவ மதம் பரப்புகின்ற முயற்சிகளுக்குத் தடையாகக் காணப்பட்டதனால் அவர்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்துக் கொண்ட அரசாங்கம் மதக்கல்வி தொடர்பாகக் காணப்பட்ட இரு அம்சங்களையும் நீக்கிக் கொண்டது. அதாவது தமது சமயம் சார்ந்த 30 மாணவர்கள் குறைந்தபட்சம் இல்லாதுவிட்டால் வித்தியாசாலைகளை நடத்த முடியாதென்பது மற்றையது மாணவர்களுக்கு அவரவர் மதத்திலேயே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்பது. (ஈழகேசரி 1934 ஜனவரி 07, ப.07).

சமயக்கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களின் நடத்தைகள் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் ஈழகேசரி பல வெளியீடுகளில் கூறி வந்தது. அவ் வெளியீடுகளில் ஒன்றில் வெளிவந்த செய்தி பின்வருமாறு காணப்படுகின்றது.

"சமயக்கல்வி நாட்டில் உண்மை நிலை பெறவேண்டுமானால் மாணவர்கள் சமயக் கொள்கைக்கும் கல்விக்கும் ஆர்வம் செய்யக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள் சமய சாஸ்திரங்கள் அறிந்தவராக இருக்க வேண்டும். ஆசிரியர் தமது வாழ்க்கையில் பிரத்தியேகமான மனப்பான்மையும், மதிப்பும் சமயாசாரத்திற்குக் கட்டுப்பட்டவராகவும் இருக்க வேண்டும்" (ஈழகேசரி 1949 ஜனவரி02, ப.06)

இத்தகவலானது அக்காலப்பகுதியில் ஆசிரியர்கள் சிலர் போதியளவு சமய அறிவு கொண்டவர்களாக விளங்கவில்லையென்பதனைக் காட்டுகிறது. ஈழகேசரி வெளிவந்த காலத்தில் சைவக்கல்வியை மேலோங்கச் செய்வதற்கு உதவிய சமயக்கல்வி நிறுவனங்கள் தொடர்பான செய்திகளையும் இப்பத்திரிகை வழங்கியது. குறிப்பாகச் சைவாவித்தியாவிருத்திச் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பான பல செய்திகள் ஈழகேசரியில் காணப்படுகின்றன.

சேர். பொன். இராமநாதன் மற்றும் சில சைவப் பெரியார்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு சைவக்கல்வியின் வளர்ச்சிக்கு இப்பத்திரிகை வெளிவந்த காலத்தில் பெருந்தொண்டாற்றி வந்தது. இச்சங்கத்தின் வளர்ச்சியில் அ. இராசரத்தினத்தின் பங்கு அளப்பரியது. 1958 வரை இச்சங்கமானது 187 பாடசாலைகளையும் 1500 ஆசிரியர் களையும், 3500 மாணவர்களையும் கொண்டிருந்தது. இவற்றைவிட அது ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, 7 ஆங்கில வித்தியா சாலைகள், 2 அநாதைப் பிள்ளைகளின் விடுதிகள், 15 நெசவுப் பாடசாலைகள், 16 கூடை இழைக்கின்ற பாடசாலைகள் என்பவற்றைக் கொண்டிருந்தது. எனவே இப்பெரிய அமைப்பு உதவிகள் பிறரிடம் கோரியபோது அவற்றுக்கான விளம்பர ஊடகங்களிலொன்றாக இப்பத்திரிகை பயன்படுத்தப்பட்டது. (ஈழகேசரி, 1943 நவம்பர் 14, ப.04)

இவ்வாறே சைவபரிபாலனசபை தொடர்பாகவும் பல செய்திகள் ஈழகேசரியில் காணப்படுகின்றன. இவ்வமைப்பானது 1888 இல் வண் ணார்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்தவகையில் ஆறுமுக நாவலரின் சைவக்கல்விப் பணியைத் தொடர்ந்து பாதுகாத்து வந்த பெருமை இதற்கு உண்டு. இச்சபையால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் பற்றியும், அதில் சித்தியடைந்தவர்கள் பற்றிய விபரங்களையும் ஈழகேசரியில் காண முடிகின்றது.

எனவே இப்பத்திரிகையானது அன்னியராட்சிக்காலத்தில் சமயக்கல்வியானது பாதிக்கப்பட்டு நின்றபோது அக்கல்வியை வளர்ப்பதற்குத் தேவையான ஆக்கங்கள் பலவற்றை வெளியிட்டது. அன்னியரது சமயக் கல்வியின் பிரயோசனமின்மையை அவ்வப் போது வெளிப்படுத்தியது. சைவப் பாடசாலைகளுக்கு மாணவர்களைச் செல்லுமாறு ஊக்கப்படுத்தியது. 1951 இல் சமயக்கல்வியானது எல்லாப் பாட சாலைகளிலும் அவசியம் கற்கப்பட வேண்டு மென்ற அரசின் உத்தரவு ஈழகேசரிக்கு மகிழ்ச்சியை வழங்கியிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

**தொழிற்கல்வி**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் தொழிற்கல்வியின் அவசியமானது உணரப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலை தேய்வடைந்து சென்றமையினால் வெறுமனே உத்தியோகக் கல்வியை மட்டும் கற்காமல் தொழிற்கல்வியின் அவசியத்தையும் உணரவேண்டிய நிலை காணப்பட்டது. அந்தவகையில் சமகாலத்தில் தொழிற் கல்வியை ஊக்குவிக்கின்ற பல செய்திகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன.

ஈழகேசரியானது நீண்டகாலமாகவே தொழிற் கல்வியின் அவசியத்தையுணர்ந்து அதன் முக்கியத்துவத்தினைத் தனது வெளியீடுகளில் கூறிவந்தது. அன்னியரின் கல்வியானது வாழ்க்கைக்கு ஏற்றதல்ல என்பதனையும் இக்கல்வியானது தேசநன்மையில் அக்கறை கொண்டவர்களுக்குத் தேவையற்றது என்பதையும் தனது வெளியீடுகள் பலவற்றில் இப்பத்திரிகை விளக்கியிருந்தது.

அவ்வகையில் தொழிற்கல்வி தொடர்பாக ஈழகேசரி பின்வரும் கருத்தினைக் கொண்டிருந்தது.

"நாட்டுக் கல்வியை ஏற்படுத்துவதற்கு நமது பிரதிநிதிகளாகவுள்ளவர்களும் மனத்துக்கமின்றித் தொண்டாற்ற வேண்டும். அத்துடன்

சனங்களும் விசுவாசமான தன்மைகள் ஏற்பட வேண்டுமென்று விரும்பி உண்மைக் கல்வி முறைகளை அனுசரித்தால் விரைவில் நம் நாடு நன்மையெய்தக்கூடும்" (ஈழகேசரி, 1930 ஒக்ரோபர் 15, ப.02)

நாட்டிற்கேற்ற கல்வி அல்லது தொழிற் கல்வியை ஆதரித்து அதன் அவசியத்தைக் கூறிவந்த இப்பத்திரிகை உத்தியோகக் கல்வியின் தீமைகளையும் எடுத்துக்காட்டியது. இத்த கைய கல்வியானது மனிதன் தெய்வபக்தி அற்றவனாகவும் அதேநேரம் தேசப்பற்று, தாய்மொழிப்பற்று, பெரியோரைப் போற்றும் பண்பு போன்றவற்றை அவனிடம் வளர்க்காது என்ற கருத்தையும் கொண்டிருந்தது.

ச. சபாபதி என்பவர் தொழிற்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு கட்டுரையை ஈழகேசரியில் எழுதியிருந்தார். அக்கட்டுரையில் நமது நாட்டு மக்களுக்குத் தொழிற்கல்வியையும் வாழ்க்கையின் மர்மங்களையும் புகட்டுதல் அவசியமானதெனவும், இளைஞர்கள் பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுத் தொழிற் பயிற்சி அவர்களுக்கு அளிக்க வேண்டுமெனவும், தொழிற்பயிற்சியடைந்தவர்கள் நாட்டின் தாய்மொழியில் அத்தொழிலை விருத்தி யாக்குவதற்கேற்ப கலாநிலையங்களையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவது அவ சியமென்பதையும் அவர் அக்கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந்தார். (சபாபதி, ச., ஈழ கேசரி 1932 யூலை 31, ப.02) மேல்நாட்டு ஆடம்பரங் களை விரும்பிய அக்காலச் சமூகம் இக்கல்வியை பெருமளவுக்கு ஆதரிக்கவில்லை.. இதன் காரணமாக அக்காலத்தில் வட இலங்கையில் கைத்தொழில், வர்த்தகம் என்பன வீழ்ச்சியடையும் நிலை காணப்பட்டது.

1937களில் யாழ்ப்பாணச் சமூகத்தின் நிலை கவலைக்கிடமாகி வருவதனைப் பல பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன. மலாயாவிலிருந்து உத்தியோகத்தின் மூலம் கிடைத்த வருவாயிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. அதேபோல் தென்னிலங்கையில் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணிபுரிகின்ற வாய்ப்புக்களும் யாழ்ப்பாணத்தவர்களுக்குக் குறைவாகவே காணப்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்த காலங்களில் தொழிற்கல்வியின் அவசியம் பலராலும் உணரப்பட்டது. அச்சமயத்தில் போக்குவரத்துத் தடைப்பட்டதால் நாட்டின் உணவுப்பொருட்களின் இறக்குமதியும் பாதிக்கப்பட்டது. எனவே 1946 ஆம் ஆண்டுவரை தொழிற்கல்வியை விரும்புகின்ற மாணவர்களுக்கு அதனைக் கற்றுக் கொடுப்பதற்குச் சிறந்த கல்லூரியும் வட இலங்கையில் காணப்படவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியிலும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலும் தொழிற்கல்விக்கான வசதிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. காலத்துக்குக் காலம் அரசாங்கம் கல்வி முறை யில் பல திருத்தங்களைக் கொண்டு வந்தபோதும் தொழிற்கல்வியில் அது அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இதனை ஈழகேசரியின் வெளியீடுகள் அறியத்தருகின்றன. 1952 ஆம் ஆண்டின் பின்பே அரசு தொழிற்கல்லூரிகளை அமைப்பதற்குத் தீர்மானித்துக் கொண்டது. அதன் பொருட்டு யாழ்ப்பாணம், கண்டி, காலி, மானிப்பாய், ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தொடர்ந்து 8 ஆம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.

1953 ஒக்ரோபர் 4 இல் வெளிவந்த ஈழ கேசரியில் தொழிற்கல்வி தொடர்பாகக் காணப் படுகின்ற செய்தியானது தொழிற்கல்வி தொடர்பான பிரச்சினைகள் முடிவுக்கு வர வில்லையென்பதனை உணர்த்துகிறது.

அச்செய்தி பின்வருமாறு,

"அடுத்தவருடங்களில்பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உத்தி யோகமின்றிச் சீவியத்துக்கு

உழைக்க வழியறியாராய்த் தட்டுத்தடுமாறும் நிலை வரப்போகின்றதென்றே கூற வேண்டும். இப்பரிதாபகதி வராமல் தடுக்க வேண்டின் மாணவர்கட்கு கற்றுக் கொடுக்கப்படும் கல்விமுறை முற்றுமுழுதாக மாற்றப்பட வேண்டும்." (ஈழகேசரி 1953 ஒக்ரோபர் 04, ப,02)

தொழிற்கல்வியை ஆதரித்த ஈழகேசரி அது வெளிவந்த காலப்பகுதியில் அதன் அவசியத்தை உணர்த்தி வந்ததுடன் தொழிற்கல்வி கற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்புக்களையும் வழங்குமாறு அரசாங்கத்திடம் கேட்டும் வந்தது. அந்தவகையில் அதன் இறுதிக்காலத்தில் தொழிற்கல்வி வழங்குவதற்கான முயற் சிகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு அதற் கான இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**சர்வகலாசாலையின் தோற்றம்**

நாகரிகம் முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் கல்வி வளர்ச்சியில் ஈடுபடும் உயர்நிறுவனங்கள் இரு ந்து வந்துள்ளன. இன்றைய உலகில் இத்தகைய நிறுவனங்கள் சர்வகலாசாலைகளெனவும், பல்கலைக்கழகங்களெனவும் அழைக்கப் படுகின்றன. பொதுவாக உலகில் 19 ஆம் நூற் றாண்டில் நவீன பல்கலைக்கழகங்கள் தோன்றத் தொடங்கின. 18 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் நடைபெற்ற தொழிற்புரட்சியால் உருவாக்கப்பட்ட புதிய சூழ்நிலையில் தான் இவை தோன்றின எனலாம். லண்டன் பல்கலைக்கழகம் ஏறத்தாழ 190 வருடங்களுக்கு முன்னர் தோற்றம் பெற்றது. அதேபோல் இந்தியாவில் நவீன பல்கலைக்கழகங்கள் 1857 இல் ஆரம்பிக்கப்பட்டன. இவை மும்பாய், கொல்கத்தா, சென்னை ஆகிய பிரதான மாகா ணங்களில் அமைக்கப்பட்டன.

நமது நாட்டில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இடைநிலைக்கல்வி கற்ப தற்கான வசதிகள் அதிகரித்தன. இதன் காரண மாகப் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய திறமை யானவர்கள் நாட்டில் காணப்பட்டனர். அதேநேரத்தில் இவர்களுக்கு உயர்கல்வி வசதிகள் குறைவாகவே காணப்பட்டன. இதன் காரணமாக 1906 இல் "இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம்" உருவாக்கப்பட்டது. தொடர்ந்து இதனூடாக இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுவதற்கான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சங்கத்தை உருவாக்குவதில் முன்னணி யில் நின்றவர்களில் சேர். பொன். அருணாசலம், பி. குமாரசாமி போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அதேநேரம் மேலைநாட்டுக் கல்வி கற்ற அருணாசலத்துடன் இணைந்து கொண்ட சிலர் லண்டன் பல்கலைக்கழக அமைப்பு கீழைத்தேச நாகரிகச் சார்பற்றதாக பிரதான மொழி விடயத்தில் காணப்படுவதில் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பல்கலைக்கழகம் தேசிய மறுமலர்ச்சியின் பிரதான அங்கமெனக் கருதினர். (மலலசேகரா, ஜி.பி, 1969, ப,996)

1911 ஆம் ஆண்டுவரை சர்வகலாசாலை தொடர்பாக அரசாங்கம் எவ்வித நடவடிக் கைகளையும் மேற்கொள்ளவில்லை. 1912 ஆம் ஆண்டளவில் அரசாங்கம் கொள்கை யளவில் ஓர் சர்வகலாசாலை ஏற்பட வேண்டு மென்பதை ஏற்றுக்கொண்டது. 1921 இல் 155 மாணவர்களுடன் கொழும்பில் ஓர் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயத்தில் இது லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் படுத்துகின்ற ஒரு கல்லூரியாகவே காணப் பட்டது. கலை, விஞ்ஞானப் பிரிவுகள் அங்கே காணப்பட்டன. ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், பாளி, சமஸ்கிருதம், வரலாறு, பொருளியல், புவியியல், சிங்களம், தமிழ்க் கல்வி, மொழியியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன.

1930 இல் ஈழகேசரி ஆரம்பித்த காலத்திலும் சர்வகலாசாலை தொடர்பான பிரச்சினைகள்

தொடர்ந்த வண்ணமே காணப்பட்டன. இதன் காரணமாகச் சர்வகலாசாலை அமைப்பதில் மேற்கொண்ட முயற்சிகள், ஏற்பட்ட பிரச்சினைகள், மொழிப்பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இப்பத்திரிகையில் காணப்படுகின்றன. 1931 இல் ஈழகேசரியில் வெளிவந்த செய்தியொன்றில் சர்வகலாசாலை அமைக்கப்படுவதற்கான காலம் நீடித்துச் செல்வதையிட்டுத் தான் கவலையடைவதாக அதில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

"இலங்கையில் ஓர் சர்வகலாசாலை ஏற்படுத்து வதற்கு வேண்டிய முயற்சிகள் சென்ற மூன்று வருடமாக நடந்து வருகின்றது இன்னும் ஒரு முடிவுதானும் வந்தபாடில்லை. சீக்கிரத்தில் வரப் போவதுமில்லை" (ஈழகேசரி, 1931 செப்ரெம்பர் 30, ப.02)

இலங்கையில் சர்வகலாசாலை அமைக்கப் பட வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருந்த ஈழகேசரி அது அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவ்வப்போது தனது வெளியீடுகளில் வலியுறுத்தி வந்தது. அதேநேரத்தில் சமகாலத்தில் சர்வகலாசாலை தேவையில்லை என வாதிடுகின்ற ஒரு குழுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தது. மேற்கூறப்பட்ட இத்தகைய கருத்தைக் கொண்டிருந்த புனித. சென். பத்திரிசியார் கல்லூரி பிரதம ஆசிரியர் மத்தியூசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்ற ஈழகேசரி சுதேசபாஷைகள் விருத்தியடையவும் தேசிய பாஷைகள் வளர்ச்சியடையவும் நமது நாட்டுச் செல்வம் வெளியே செல்வதைத் தடுக்கவும் ஒரு பல்கலைக்கழகம் அவசியமென்பதனை வலியுறுத்தியது. (ஈழகேசரி, 1934 டிசெம்பர் 30, ப.06)

இலங்கையில் சர்வகலாசாலைக்கான கோரிக்கைகள் பரவலாக ஏற்பட்டுக் கொண்டிருந்த அதேநேரத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும் சர்வகலாசாலைகள் அமைக்கப் பட்டு உயர்தரக்கல்வி சிறப்பாக நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பலரின் முயற்சிகளினாலும் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றபோது அடுத்து அது அமைக் கப்படும் இடந்தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டன. சிலர் கொழும்பிலமைக்கப்பட வேண்டுமெனவும் வேறு சிலர் அதனை விரும்பாமலும் இருந்தனர். அவர்களில் சிலர் பேராதனையில் பல்கலைக்கழகம் அமைக்கப் படுவதனையே விரும்பினர்.

இவ்விடயந் தொடர்பான ஈழகேசரி தனது கருத்தைப் பின்வருமாறு முன்வைக்கின்றது.

"பல விஷயங்களைப் பல்வகைத்தாய் நோக்குமிடத்துச் சர்வகலாசாலை கொழும்பு நகரிலே அமைக்கப்படுவது மிகவும் நல்லதும் ஏற்றதுமென்பதே எமது முடிவானதும் உறுதி யானதுமான அபிப்பிராயம்." (ஈழகேசரி, 1936 மே 31, ப.08)

இப்பத்திரிகையைப் பொறுத்தவரை அது பல்கலைக்கழகம் அமைக்கப்படுமானால் அது கொழும்பில் ஆரம்பிக்கப்படுவதையே விரும்பியது. அங்கே பல வசதிகளுண்டென்றும் தூர இடத்திலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு சிரமங்கள் ஏற்படாதெனவும் அங்குள்ள வைத்திய கல்லூரி, சட்டக்கல்லூரி என்பன வற்றை எதுவித சிரமுமின்றி இதற்குப் பயன் படுத்தலாமெனவும் அது கருதியமையே அதற்கான காரணமாகும். (ஈழகேசரி, 1935 செப்ரெம்பர் 01, ப.06) இறுதியாக ஆரம்பத்தில் கொழும்பிலிருந்த பல்கலைக்கழக கல்லூரி 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகமாக மாறியது. கொழும்பிலே பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டாலும் அது பேராதனையில் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டதும் அங்கே மாற்றப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

சர்வகலாசாலை உருவாகும் தறுவாயில் 30 வருடங்களாகப் பலர் மேற்கொண்ட இம் முயற்சி இப்போதுதான் ஒரு வடிவத்தைப் பெற்றுள்ளதென மகிழ்ச்சியடையும்

இப்பத்திரிகை இதனை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவை பற்றிக் குறை கூறுகின்றது. இக்குழுவில் அங்கத்துவம் பெற்றவர்கள் கல்வித்துறையில் சிறிதும் அனுபவமற்றவர்களெனவும் இச்சபையிலுள்ள 60 பேரில் 24 பேர் அரசாங்கசபை உறுப்பினர்களாகையால் இது மற்றொரு அரசாங்க சபையாக மாறப்போவதாகவும் கூறுகின்றது. (ஈழகேசரி, 1942 மார்ச் 29, ப.06) சர்வகலாசாலை ஜூலை 1ஆம் திகதி தொடக்கம் இலங்கையில் தனது பணியை ஆரம்பித்தது. சேர். ஐவர். ஜெனிங்ஸ் என்பவர் உபஅபேட்சகராக நியமனம் பெற்றார். இவர் அரசியல் யாப்புச்சட்டத்தில் பிரித்தானியாவில் பேர் போன ஒருவராக காணப்பட்டதுடன் அரசியல் யாப்புடன் தொடர்புபட்ட வகையில் பலதரமான நூல்களையும் எழுதியவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்திற்கான போராட்டம் முடிந்தபோது ஏற்பட்ட மற்றொரு பிரச்சினையையும் ஈழகேசரியினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது பல்கலைக்கழகத்தில் போதனா மொழியாகத் தாய்மொழி இருக்கவேண்டுமென்பதே பிரச்சினை. இவ்விடயத்தில் கல்வி மந்திரி கன்னங்கரா மிகவும் உறுதியாக இருந்தார். தாய்மொழியே போதனா மொழியாக வேண்டுமென்ற இவரின் எண்ணத்திற்கு ஆதரவாகக் கருத்துக் கூறும் ஈழகேசரி சர்வகலாசாலையில் தாய்மொழியில்தான் கல்வி புகட்ட வேண்டுமெனவும் ஆங்கிலப் பற்றும் மேலைத்தேச நாகரிகத்தில் ஊறியவர்களுக்கும் இவ்விடயம் கவலையை உண்டாக்கிவிட்டதெனவும் உண்மையான நோக்கங்கொண்ட எவரும் மந்திரியின் திட்டத்தை ஆதரிக்க வேண்டுமெனவும் கூறுகின்றது. (ஈழகேசரி 1945 ஜுலை 08, ப.04)

1950 களின் பின்பாக இலங்கைக்கு ஒரு சர்வகலாசாலை வேண்டுமெனக் கோரி வந்த ஈழகேசரி தமிழருக்குத் தமிழில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து கொள்ளத்தவறவில்லை. ஈழகேசரியினது இத்தகைய நிலைப்பாட்டிற்கான காரணங்களிலொன்று அச்சமயத்தில் நாட்டில் ஏற்படத் தொடங்கிய இன முரண்பாடே ஆகும்.

இவ்விடயந் தொடர்பாக ஈழகேசரி தனது கருத்தைப் பின்வருமாறு முன்வைக்கின்றது.

"தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தமிழ் மக்களிடையே பேராதரவு பெற்று வருகின்றது. தூங்கிக் கொண்டிருக்கும் தமிழினத்தை இவ்வியக்கம் தட்டியெழுப்பியதென்றே கூறவேண்டும். தன் கையே தனக்குதவி என்ற அனுபவ உண்மை யை தமிழ்மக்கள் இப்போது தான் உணர ஆரம்பித்துள்ளனர்." (ஈழகேசரி, 1957 ஏப்ரல் 14, ப.06)

தமிழ் பல்கலைக்கழகம் தேவையென்று பலர் எழுதிய கட்டுரைகள், வாசகர் எழுதிய கடிதங்கள் போன்றவற்றையும் ஈழகேசரி வெளியிட்டது. 1957 அளவில் இக்கோரிக்கையானது உச்ச நிலையை அடைந்ததெனலாம். ஈழகேசரி தோன்றிய காலந்தொடக்கம் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் தேவையென்பதை வலியுறுத்தி வந்தது. அப்பல்கலைக்கழகத்தில் போதனா மொழியாக தாய்மொழிதான் இருக்க வேண்டும் என்பதையும் அது கூறி வந்தது. ஆனால் 1950 களின் பின்னர் மொழிப்பிரச்சினை உச்ச நிலையை அடைந்தபோது தமிழருக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவசியமென்பதையும் அது உணர்த்தியது.

**பெண் கல்வி**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் இலங்கைச் சமூகத்தில் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாண சமுதாயத்தில் கல்வி வசதிகள் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டன. குறிப்பாகப் பெண் கல்வி என்பது மிகவும் மோசமான நிலையிலேயே காணப்பட்டது. வீடுகளில் உதவி செய்யக்கூடியவர் என்ற அடிப்படையில் அவர்கள் பாடசாலைக்குச் செல்வதனை பெற்றோர்கள் விரும்பவில்லை.

(சின்னத்தம்பி, மா., 2000,ப,53) இவ்வகையான சூழலில் தோன்றிய ஈழகேசரி பெண்கல்வி தொடர்பான பல்வேறு ஆக்கங்களை வெளியிட்டு பெண்கல்வியின் முன்னேற்றத்திற்குத் தன்னாலியன்ற பணியை மேற்கொண்டது. இருப்பினும் இப்பத்திரிகை கூட அவர்களது கல்வியினை ஒரு வரையறைக்குள்ளேயே தான் வைத்திருக்க விரும்பியது.

இலங்கையில் பலதுறைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் சட்டரீதியான சமத்துவம் வென்றெடுக்கப்பட்டுள்ளது. கல்வி, தொழில், சொத்துரிமை போன்றவற்றிலான சமத்துவத்தின் முக்கியத்துவம் பெரியதே. ஆயினும் ஆணாதிக்கச் சிந்தனைகள் இன்றும் ஆர;மாக வேரூன்றியுள்ளன. (சிவசேகரம், சி, 2002, ப.29) இத்தகையதொரு நிலைமையானது இன்று நேற்று வந்ததல்ல பன்னெடுங்காலமாக உலகில் வேரூன்றி வளர்ந்ததொன்று. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலும் தொடர்ந்த இம்முறையானது ஆங்கிலேயரின் ஆட்சியிலும் மாற்றமடையவில்லை. பெண் என்றால் அவள் இப்படித்தான் இருக்க வேண்டும். அவள் இவ்வாறமைய வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் அவளுக்கு இருந்தன. குடும்பமென்ற கட்டுப்பாடு மேன்நிலையடையும்போது அதற்குள் அகப்பட்ட பெண் பல வகைகளில் குறியீட்டுப் பொருளாகக் கொள்ளப்படுகின்றாள். தாய்மை, குழந்தை வளர்ப்பு, சமையல், வீட்டு நிர்வாகம் போன்ற பல வாழ்க்கைத்துணை நலப் பண்புகள் அவளிடம் சேருகின்றன. (திருச்சந்திரன், செல்வி, 1997, ப.212) இப்படிப்பட்ட பெண்கள் முன்னேற்றமடைவதில் பல பிரச்சினைகள் காணப்பட்டன.

பொதுவாகச் சில குடும்பங்களைத் தவிர அக்காலப்பகுதியில் பலரும் பெண்பிள்ளைகள் பிறப்பதனை தமக்குச் சுமையெனக் கருதினர். அக்காலப்பகுதியில் பெண் பிள்ளைகள் பிறக்கும் போது இந்தியா போன்ற சில நாடுகளில் அப்பிள்ளைகள் கொலை செய்யப்பட்டனர். சிலசந்தர்ப்பங்களில் தாயின் கருவிலிருக்கும் போதே பெண் குழந்தை என சந்தேகங் கொண்டால் அக்கருவைக் கலைத்த சம்பவங்களுமுண்டு. இது இவ்வாறிருக்க 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சைவ மறுமலர்ச்சியின் தந்தையாக விளங்கிய ஆறுமுகநாவலர் கூடப் பெண்கள் பற்றிய பாரம்பரியக் கருத்தையே கொண்டிருந்தார். ஈழகேசரி வெளிவந்த காலத்திலும் இந்நிலை தொடர்ந்தது. பெண்கல்வி, பெண்வாக்குரிமை என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதில் அக்காலப்பகுதியில் பெண்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

20 ஆம் நூற்றாண்டில் தென்னாசிய நாடுகளில் உருவாகிவந்த சீர்திருத்த இயக்கங்கள் பெண் கல்வியை வலியுறுத்திக் கொண்டன. ஈழகேசரியின் காலப்பகுதியிலும் சரி அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலும் சரி நமது தேசியவாதிகள் பலர் பெண்கல்வி தொடர்பாகப் பிற்போக்கான கொள்கையையே கொண்டிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. பெண்கல்வியானது அவர்களைச் சிறந்த மனைவியராகவும், தாய்மாராகவும் மாற்ற வேண்டும். வீட்டு நிர்வாகம், தையல், அழகுக்கலை ஆகியவற்றில் தேர்ச்சியும், சைவசமய இயக்கங்கள், சாஸ்திரங்கள் போன்றவற்றையும் அவர்கள் அறிந்திருந்தால் போதுமானது என்பதே அவர்கள் கருத்தாகும். பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும் கல்வியானது உத்தியோகம் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடாதெனவும் சன்மார்க்கத்தினையும் வாழ்க்கையினையும் குறித்துச் சொல்வதற்காகவும் அது இருக்க வேண்டுமென்பதும் அக்காலத்தில் ஈழகேசரியின் கருத்தாகக் காணப்பட்டது. (ஈழகேசரி, 1939 டிசெம்பர் 24, ப.06)

1930 காலத்தில் க.இராசதுரை என்பவர் பெண்கல்வி எப்படி இருக்கவேண்டுமென்ற தலைப்பில் கட்டுரையொன்றினை ஈழகேசரியில் எழுதியிருந்தார். அதில் பின்வரும் விடயங்களை அவர் குறிப்பிட்டிருந்தார்.

"இந்நாட்டில் கலாசாலைகளில் படித்து ஒரு பத்திரத்தைப் பெற்றுச் செருக்குற்று நிற்கும் பெண்கள் உண்மைக் கல்விச் செல்வத்தைப் பெற்றவராகார். நமது செந்தமிழ்த் திருநாட்டுச் சீரிய நாகரிகத்துக்கு ஏற்ப குடும்பத்தை திறம்பட நடத்தும் செவ்விய ஆற்றலையும் பெரியோருக்குக் கீழ்படிந்து நடத்தலையும் உயிருக்கு உறுதியாகும் உண்மைப் பொருளையுணர்ந்து செல்லும் வகை அறநெறியில் பயின்று ஒழுகுதலையும் இன்னோரன்ன பிறவற்றையுமே வளர்க்கத்தக்க சீரிய கல்வி நமது தமிழ்நாட்டுப் பெண்கட்குப் புகட்டத்தக்கது." (இராசதுரை, க., ஈழகேசரி 1930 ஒக்ரோபர் 22, ப.03)

பெண்கள் கல்வி கற்பதனால் சில கெடுதிகள் ஏற்படுமென ஈழகேசரிக் காலத் தமிழ்ச் சமூகம் நினைத்தது. பெண்கள் கல்வி கற்பதனால் பலருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வார்களெனவும் பெரியவர்கட்கு அடங்கி நடக்கமாட்டார்களெனவும் வீட்டு வேலைகளைச் சரியாகக் கவனிக்க மாட்டார்களெனவும் அவர்கள் கருதினர். (இராசதுரை,க., ஈழகேசரி 1930 ஒக்ரோபர் 22, ப.03)

பெண்களின் முன்னேற்றம் தொடர்பாக ஈழகேசரியில் பெண்களால் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. இக்கட்டுரைகள் பொதுவாக ஈழகேசரியின் கருத்தையே பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு எழுதப்பட்ட கட்டுரையொன்றில் அதனது ஆசிரியர் தொழிற்கல்வி, தாய்மொழிக்கல்வி என்பவற்றைப் பெண்கள் கற்க வேண்டுமெனவும் அவர்கள் கட்டுரைகள், நூல்கள் என்பன எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டுமெனவும் கூறுகின்றார். (இராசம்மா, க., ஈழகேசரி 1930 ஒக்ரோபர் 22, ப.03) இதேபோன்று மற்றொரு கட்டுரையில் பெண்கள் அயல் வீடுகளுக்குச் செல்வது நிறுத்தப்படுவதன் அவசியம் கூறப்படுகின்றது. (பாக்கியம், ச., ஈழகேசரி 1930 ஒக்ரோபர் 15, ப.04).

அக்காலப்பகுதியில் பெண்களுக்கான பாடசாலைகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. கலவன் பாடசாலைகள் பல காணப்பட்டாலும் அவற்றில் ஆண்களே பெருமளவுக்குக் கல்வியினைக் கற்றுவந்தனர். பெண்கள் சிலர் அப்பாடசாலைகளில் கற்றாலும் அவர்கள் 10 அல்லது 12 வயதுவரையே கல்வியினைக் கற்றனர். அவள் பெரியவள் ஆகியதும் திருமணமாகும் வரை வீட்டிலேயே வைத்துப் பாதுகாக்கப்படுகின்ற பொருளாக மாறிவிடுவாள். உண்மையில் பெண்கள் அன்னிய நாகரிகத்தைப் பின்பற்றுவதை அக்காலச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்கள் கல்வியில் அக்கறை கொண்டு சேர். பொன் .இராமநாதன் ஒரு கல்லூரியை நிறுவியபோதுங்கூட அவரும் கூடப் பெண்கள் வரையறுக்கப்பட்ட கல்வியையே கற்கவேண்டுமென்பதனை விரும்பியிருந்தார். (மௌனகுரு, சி., 1993, ப.59) 2ஆம் உலகயுத்தம் முடிவடைந்த காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடியும் வேலையில்லாப் பிரச்சினையும் ஏற்பட்டன. இந்நிலையில் பெண்கள் வேலைக்கு போவதனைப் பின்வரும் காரணத்தைக் காட்டி ஈழகேசரி நிராகரிக்கின்றது.

"வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்திருக்கும் இக்காலத்தில் உத்தியோகத்துக்குப் போட்டி போட்டால் நாட்டின் கதியென்னவாகுமோ எனச் சிந்திக்க முடியவில்லை" (ஈழகேசரி, 1948 ஓகஸ்ட்01, ப.10).

1945 இன் பின்னர் ஏற்பட்ட கல்வி மாற்றங்கள் பெண்கள் தேசிய அபிவிருத்தியில் அதிகம் பங்குகொள்வதற்கு இடமளித்தது. கல்வி, பயிற்சிகள், தொழில் போன்றவற்றில் ஆண்களுடன் சமனாகப் பெண்கள் ஈடுபடத் தொடங்கினர். (சரோஜா, சி., 1978, ப.79) இதன் காரணமாகவே உத்தியோகத்துறையிலும் 1945 களின் பின்பாகப் போட்டி நிலைமையொன்று இருபாலாருக்குமிடையில் உருவானது.

1948 காலப்பகுதியில் எஸ்.சிவலிங்கம் என்பவர் ஈழகேசரியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இக்காலத்தில் பெண்கள் வேலைக்குச் செல்வது உகந்ததல்ல எனவும், அவர்கள் வேலை செய்தால் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்குமெனவும் குறிப்பிடுகின்றார். தொடர்ந்து அவர் கூறும்போது, பிரசவகால விடுமுறை, அதிக மணித்தியால வேலை மேற்கொள்ள முடியாமை, இரவுநேரங்கள் வேலை செய்ய முடியாமை, இடமாற்றம் செய்தால் வேலை செய்வதில் பிரச்சினைகள் போன்ற பல காரணங்களை இதற்காக அவர் குறிப்பிடுகின்றார். (சிவலிங்கம், எஸ்., ஈழகேசரி, 1948 செப்ரெம்பர், ப.02)

த.க.ம. பொன்னம்மாள் என்பவர் உத்தியோகம் பார்க்கும் பெண்களைப் பற்றி அக்காலத்தில் சில கருத்துக்களைக் கொண்டிருந்தார். அதனைப் பின்வருமாறு ஈழகேசரியினூடாக வெளிப்படுத்துகின்றார்.

"அரசாங்க சேவையில் ஈடுபடும் பெண்களுக்கு கற்பினை ஒழுக்கப்படி ஒழுகநேரமெங்கனமுண்டு. கணவனைக் கவனிப்பதெங்கணம். தம்பிள்ளை களை கவனிப்பதெங்கணம்." (பொன்னம்மாள், த.க.ம, ஈழகேசரி, 1948 செப்ரெம்பர் 12, ப.02)

எனவே பெண்கல்வி பற்றியும், அவர்கள் உத்தியோகக்கல்வி கற்பது பற்றியும் இரு வேறுபட்ட கருத்துக்கள் இக்காலப்பகுதியில் இருபாலாரிடமும் காணப்பட்டதனை இதன் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. இப்பத்திரிகை "பெண்கள் பகுதி" என்ற ஒரு பிரிவினை ஆரம்பித்து அவர்கள் தொடர்பான பல தகவல்களை வழங்கியது. இவ்வாறே "விவாதமேடை" என்ற மற்றொரு பகுதியை ஆரம்பித்து பெண்கள் சமஉரிமை கேட்பது தொடர்பான பலரின் அபிப்பிராயங்களை வெளியிட்டது.

கல்வியில் மட்டுமல்ல பெண்கள் வாக்குரிமை பெற்றுக் கொள்வதனையும் கூட அக்காலத் தமிழ்ச் சமூகம் பெருமளவுக்கு ஆதரிக்கவில்லை. இதனைப் பல்வேறு காரணங்கள் காட்டித் தமிழ்த்தலைவர்கள் நிராகரித்தனர். ஈழகேசரியும் வாக்குரிமை பெறுவதற்குத் தமிழ்ப் பெண்கள் இன்னமும் போதிய தகைமையடையவில்லை எனப் பின்வரும் காரணத்தைக் காட்டி நிராகரிக்கின்றது.

"தமக்கென்று ஓர் சொந்த அபிப்பிராயத்துடன் விஷயங்களைப் பூரணமாக ஆலோசனை செய்து சரி பிழையறியும் ஆற்றலும் பெண்களிடத் திலிருக்கின்றதா?.... ஆண்களே வாக்குரிமையைப் பற்றியறியாமலிருக்க பெண்கள் எப்படி அறியப் போகிறார்கள்." (ஈழகேசரி, 1930 செப்ரெம்பர் 10, ப.02)

சீதனப் பிரச்சினையும் கூட அக்காலத்தில் பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டது. இதனைத் துணிந்து எதிர்த்த ஈழகேசரி இவ்வழக்கம் சமுதாய முன்னேற்றத்துக்குப் பெருந்தடையெனவும் எல்லோரும் சேர்ந்து இதனை ஒழிக்க முன்வர வேண்டுமென்ற கருத்தையும் முன்வைக்கின்றது. (ஈழகேசரி, 1951 யூன் 24, ப.06)

பெண்கல்வியானது ஈழகேசரி வெளிவந்த காலத்தில் மிகவும் மோசமான நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் அதனது இறுதிக் காலங்களில் பெண்கல்வியில் மாற்றங்கள் பல ஏற்பட்டு ஆண்களுக்குச் சமனாக உத்தியோகங்களில் போட்டியிடுகின்ற நிலைமையொன்று ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இலவசக்கல்வியும் அதன் பின்பாக ஏற்பட்ட மாற்றங்களுமாகும். ஈழகேசரியானது பெண்கல்வியை வெறுக்கவில்லை. அதே நேரத்தில் அது உத்தியோகக் கல்வியையும் ஆதரிக்கவில்லை. மாறாக ஒரு குடும்பத்தைத் திறம்பட நடத்தத் தேவையான கல்வியையே அது விரும்பியிருந்தது. அதுவே அக்காலச் சமுதாயத்தினது நிலையாகவும் காணப்பட்டது.

**ஆசிரியர்கள் நலன்**

நாட்டின்கல்விமுன்னேற்றத்தில்தன்னையும் இணைத்துக்கொண்ட ஈழகேசரி அக்கல்வியின் வளர்ச்சிக்குத் தூண்களாக விளங்கிய ஆசிரியர்களின் நலனிலும் அக்கறைகொண்டு உழைத்தது. அந்தவகையில் இப்பத்திரிகை வெளிவந்த காலத்தில் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தனர். இவ்வாறு இவர்கள் அக்காலப்பகுதியில் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகள் ஈழகேசரியில் எடுத்துக்காட்டப்படுவதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளும் இப்பத்திரிகையில் காணப்படுகின்றன.

1930 களில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில்அரசாங்கம்ஆசிரியர்களின் சம்பளத்தைக் குறைப்பதற்குத் தீர்மானித்தது. இந்நடவடிக்கையை ஈழகேசரி குறை கூறுகின்றது. சுயமொழிப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் A, B, C என்ற வகுப்புக்களாகத் தரம் பிரிந்து காணப்பட்டனர். இவர்களின் வகுப்புக்கு ஏற்ப சம்பளமும் குறைக்கப்பட்டது. அதேநேரத்தில் ஆங்கில வித்தியாசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களது சம்பளத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் முற்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ஈழகேசரி, 1933 பெப்ரவரி 02, ப.06)

அரசாங்கத்தினால் ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கப்படுவதனை தனது நீண்டகாலக் கோரிக்கையாக ஈழகேசரி கொண்டிருந்தது. இவ்வாறு செய்வதனூடாக முகாமைக்காரர்களின் கெடுபிடிகள் குறையுமென அது கருதியது. சபைகளால் நடத்தப்படாத சுயபாஷா வித்தியாசாலைகளிலும், இருபாஷை வித்தியாசாலைகளிலும் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தால் நேரடியாகச் சம்பளம் கொடுக்கின்றமுறை நடைமுறைக்கு வருவது தொடர்பாக அரசாங்கசபையில் விவாதம் நடைபெற்றபொழுது இம்முறை கைகூட வேண்டுமென இப்பத்திரிகை ஆசீர்வதித்தது. (ஈழகேசரி, 1936 மார்ச் 17, ப.06)

ஆசிரியர்களாகக்கடமையாற்றுகின்றவர்கள் அரசியல் விடயங்களில் தலையிடக்கூடாது என்று பரவலாக அக்காலத்தில் பேசப்பட்டு வந்தது. இவர்கள் அரசியலில் தலையிடுவதை அரசாங்கமும் கட்டுப்படுத்த முற்பட்டது. அதேநேரத்தில் ஆசிரியர்கள் அரசியலுக்கு வருவதனை விரும்பிய இப்பத்திரிகையானது அரசாங்கத்தின் இந்நடவடிக்கையைக் குறை கூறுகின்றது. கல்வித்துறையில் போதியளவு அறிவுகொண்ட ஆசிரியரே பொதுவிடயங்களில் பக்கம் சாராது நடுவு நிலைமை நோக்கி அபிப்பிராயம் கூறக்கூடியவர்களாகவும், பொதுமக்களுக்கு அரசியல் விடயமாக அறிவுரை கூறக்கூடியவர்களாகவும் உள்ளனர் எனவும் அவர்கள் நாட்டின் அரசியலில் தலையிடுவது அவசியமெனவும் கூறுகின்றது. (ஈழகேசரி, 1950 யூன் 02, ப.06)

1940 இல் இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் பலர் இராணுவத்திலிணைந்தனர். இதன் காரணமாக ஆசிரியத் தொழிலுக்குப் பஞ்சமேற்பட்டது. குறிப்பாக இக்காலத்தில் உயர்தர, நடுத்தரவித்தியாசாலைகளில்ஆசிரியப் பற்றாக்குறை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1946 இல் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஒரு குழுவை ஏற்படுத்தியிருந்தது. இக்குழுவின் சிபார்சுகளின்படி அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டபோது ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படவில்லை. (ஈழகேசரி, 1946 மே 19, ப.04) இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாண நகரமண்டபத்தில் தமிழாசிரியர்கள், பெரிய உபாத்தியாயர்கள் போன்றவர்களின் கூட்டம் நடைபெற்றது. சம்பளக் குறைவு காரணமாகப் பலர் ஆசிரியத் தொழிலை நாடாத நிலையும்கூட 1950 களில் காணப்பட்டது.

மேலும் சில பாடசாலைகளில் பாடசாலை முகாமைக்காரர்களின் கெடுபிடிகள் அதிகமாகக் காணப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களைப் பதவியிலிருந்து இவர்கள்

*நீக்கிய சந்தர்ப்பங்களுமுண்டு. யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவரை முகாமைக்காரர் நீக்கியபோது அதற்கெதிராக ஈழகேசரி குரல் கொடுத்தது. (ஈழகேசரி, 1931 யூலை 08, ப.03)*

*அவ்வகையில் ஈழகேசரியானது வெறுமனே நாட்டின் கல்வி வளர்ச்சியில் மட்டும் அக்கறை கொள்ளாது அக்கல்வியைப் போதித்த ஆசிரியர்களையும் மறந்துவிடவில்லை. இவர்கள் தொடர்பான பல்வேறு செய்திகளையும் ஈழகேசரி தவறாமல் பிரசுரித்து வந்தது.*

**மாணவர்களின் நலன்**

*ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்ட ஈழகேசரி அக்காலத்தில் மாணவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக்காட்டவும் தவறவில்லை. இப்பத்திரிகை வெளிவந்த காலத்தில் கொழும்பில் இந்து சமயத்தைப் பின்பற்றும் தமிழ் மக்கள் அதிகளவில் வாழ்ந்தபோதும் அவர்களுக்கென உயர்தர இந்துப்பாடசாலைகள் எதுவும் காணப்படவில்லை. அதேநேரத்தில் பிறசமயத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பாடசாலைகளும் அங்கு காணப்பட்டன. எனவே தமிழர் பாரம்பரியம், பழக்கவழக்கம், மொழி, பூர்வீகப்பெருமை என்பன காப்பாற்றப்பட வேண்டின் இந்துக்களுக்குத் தனியானதொரு பாடசாலை அவசியமென இது வாதாடியது. (ஈழகேசரி, 1940 ஜனவரி 21, ப.06)*

*அக்காலப்பகுதியில் யாழ்ப்பாண பாடசாலைகள் நேரம் தாமதமாகவே தொடங்கி வந்தன. ஆனால் 1941 காலப்பகுதியில் அரசாங்கம் பாடசாலை நேரத்தை காலை 8.30 மணிக்கு மாற்றிவிட்டது. பெரும்பாலான மாணவர்களுக்கு இது பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டது. அவர்கள் தோட்டங்களில் வேலை செய்துவிட்டுப் பாடசாலைகளுக்குக் குறிக்கப்பட்ட நேரத்துக்கு வருவதும் கடினமானதாகக் காணப்பட்டது.*

*இவ்விடயந் தொடர்பாக ஈழகேசரி தனது கருத்தைப் பின்வருமாறு முன்வைக்கின்றது.*

*"எங்கள் பிள்ளைகள் ஆயாமாரின் கையில் வளரவில்லை. மோட்டார் வாகனங்களில் செல்லவில்லை. விடியுமுன் எட்டரை மணிக்கே அவசர அவசரமாகப் பாடசாலைக்கு வருவதென்றால் எந்தக் கிராமத்திலும் சாத்தியமாகப்படவில்லை" (ஈழகேசரி, 1941 ஜனவரி 26, ப.08)*

*அக்காலப்பகுதியில் மாணவர்களுக்குத் தேவையான தமிழ்ப்பாடப்புத்தகங்கள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இவை இந்திய மாணவர்களின் தேவைகள் கருதியே எழுதப்பட்டன. ஆகவே இந்தப் புத்தகங்கள் இலங்கை மாணவர்களுக்கு முற்றிலும் பொருத்தமானதெனக் கூறமுடியாது. பேச்சு வழக்கில் இரு நாடுகளுக்குமிடையிலே வேறுபாடுகள் காணப்பட்டன. மேலும் யுத்த காலங்களில் புத்தகங்களை பெற்றுக்கொள்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டன. ஏழை மாணவர்கள் புத்தகங்களை வாங்குவதிலும் சிரமங்கள் காணப்பட்டன. ஒரு வகுப்புக்குப் பல நூல்களும் தேவைப்பட்டன. இவ்வாறு ஏழை மாணவர்கள் கல்வி கற்பதில் அக்காலத்தில் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளை இப்பத் திரிகை தருகின்ற தகவல்களின் ஊடாக அறிய முடிகின்றது.*

*இலங்கையில் அக்காலப் பகுதியில் நடைபெற்ற பொதுப்பரீட்சைகளில் காணப் பட்ட பல ஊழல்களை இப்பத்திரிகையினூடாக அறிந்துகொள்ள முடிகிறது. "அலங்கோலப் பரீட்சைகள்" என்ற தலைப்பில் இவ்விடயந் தொடர்பாக ஈழகேசரியின் கருத்துப் பின்வருமாறு காணப்படுகிறது.*

*" இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த C.C.S பரீட்சைக்குக் கேள்விகள் இரகசியமாக வெளி வந்தமை பற்றிய விடயங்கள் அரசாங்க சபையில் விவாதம் செய்யப்பட்டது. இது முதல் தடவையல்ல. S.S.C, J.S.C பரீட்சைக்*

கேள்விகளும் முன்பு இதேபோல் வெளியாகின" (ஈழகேசரி, 1944 டிசெம்பர் 10, ப.04)

1953 காலத்தில் மாணவர்களுக்கு இலவ சமாக வழங்கப்பட்டு வந்த மதியபோசன உணவானது அரசாங்கத்தினால் திடீரென நிறுத் தப்பட்டது. இதனை விமர்சனம் செய்கின்ற இப்பத்திரிகை இந்நடவடிக்கை தொடர்பாகப் பலரையும் நேர்காணல் செய்து பலரது அபிப்பிராயங்களையும் வெளியிட்டது. (ஈழகேசரி, 1953 யூலை 19, ப.01)

**நிறைவுரை**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் நாட்டின் கல்வி வளர்ச்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாறுதல்களுக்கான போராட்டங்களும் நடைபெற்றன. சுயமொழிக்கல்வி, இலவசக்கல்வி, சமயக்கல்வி, தொழிற்கல்வி, சர்வகலாசாலையின் தோற்றம், பெண்கல்வி முன்னேற்றம் என்பன இவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை. இம்மாற்றங்களை இப்பத்திரிகையினூடாக இலகுவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அதுமட்டுமன்றி இப்பத்திரிகையினூடாக ஆசிரியர்கள், மாணவர்களின் அக்காலநிலை, அவர்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகள் போன்றவற்றையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. சத்தியசீலன்,ச., (1994), இலங்கையின் இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
2. சந்திரசேகரம்,சோ., (1975), கல்வித்தத்துவம், கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்.
3. சுப்பிரமணியம்,நா.,(1978), ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முத்தமிழ் வெளியீட்டு மன்றம், முள்ளியவளை.
4. முகம்மது சமீம்,அ., (1998), ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் – 1900 ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரை, குமரன் வெளியீடு, சென்னை.


**சஞ்சிகைகள்**


1. ஆறுமுகம்,வ.,(1999), 'இருபதாம் நூற்றாண்டு இலங்கைக் கல்வியும் தேசிய ஒருங்கிணைப்பும்', இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
2. ஆறுமுகம்,வ.,(1983), 'இலங்கையின் நிறுவனக் கல்வியும் கோல்புறூக் விதப்புரைகளும்', சிந்தனை, தொகுதி.1, இதழ்.1, (தொ.ஆ, சிற்றம்பலம்,சி.க.), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3. சந்திரசேகரம்,சோ., (1977), 'இலங்கையில் போதனாமொழி மாற்றத்தின் ஆரம்பம் – அதன் பணி பற்றிய ஆய்வு', நான்காவது அனைத்துலகத் தமிழாராய்சி மாநாடு நிகழ்ச்சிகள், (ப.ஆ.வித்தியானந்தன்,சு.), அனைத்துலகத் தமிழராய்ச்சிமன்ற இலங்கைக்கிளை, கொழும்பு.
4. சந்திரசேகரம்,சோ.,(2000), 'சுதந்திர இலங்கையில் கல்வி வளர்ச்சி – சாதனைகளும் பிரச்சினைகளும்', கைலாசநாதம், பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் எழுபத்தைந்தாவது அகவை நிறைவினையிட்டு வெளியிடப்பட்டது, (ப.ஆ. கோபாலகிருஸ்ணஐயர்,ப.), பவளவிழா மலர் குழு, யாழ்ப்பாணம்.
5. சரோஜா,சி.,(1978), 'பெண்களும் கல்வியும்', பெருந்தொட்டக் கைத்தொழிலில் பெண்தொழிலாளர்களின் பங்கு, சிறிலங்கா பவுண்டேசன் நிறுவனம், கொழும்பு.

6. சிவசேகரம்,சி.,(2002), ' மாக்ஸியமும் பெண்ணியமும் இலங்கையில் பெண்ணுரிமையும்'. பெண் விடுதலையும் சமூக விடுதலையும், புதியபூமி வெளியீட்டகம், கொழும்பு.

7. சின்னதம்பி,மா.,(2000), ' வளர்முக நாடுகளில் பெண்கல்விவிருத்திக்கான மீள் சிந்தனை', சிந்தனை. இதழ்.1, தொகுதி.12, (ப.ஆ.கிருஸ்ணகுமார்,சோ.), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

8. திருச்சந்திரன்,செல்வி.,(1997), 'யாழ்ப்பாண சமூகத்தில் கருத்தியலும் கட்டமைப்புக்களும் நிர்ணயிக்கும் பால்நிலைப்பாடும்', தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணிலை நோக்கு, குமரன் பதிப்பகம், கொழும்பு.

9. பிரேமரத்ன,போகொட.,(1969), 'போதனாமொழி மாற்றத்திற்கான கிளர்ச்சி', இலங்கையின் கல்வி நூற்றாண்டுவிழா மலர், பாகம் 2, இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

10. மலலசேகரா,ஜி.பி., (1969), ' பல்கலைக்கழககல்வி தொடக்கம்', இலங்கையின் கல்வி நூற்றாண்டுவிழா மலர், பாகம் 2, இலங்கை கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.

11. முருகையன்,இ.,(1979), 'கல்வியல் நோக்கில் நாவலர்', நாவலர் நூற்றாண்டுவிழா மலர், (ப.ஆ.கைலாசபதி,க.,), ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்சபை, கொழும்பு – யாழ்ப்பாணம்.

12. மௌனகுரு,சி.,(1993), 'பெண்நிலைச் சிந்தனைகள்', இலங்கையில் இனத்துவமும் பெண்களும், பெண்கல்வி ஆய்வு நிறுவனம், கொழும்பு.

**பத்திரிகைகள்**

1. உதயன், 2002மார்ச்சு18, உதயன் பப்ளிகேஷன் பிறைவேட் லிமிட்டட், யாழ்ப்பாணம்.

**ஈழகேசரி பத்திரிகையின் வெளியீடுகள்**

1. ஈழகேசரி, 1930ஜூலை09, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
2. ஈழகேசரி, 1930ஒக்ரோபர்15, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
3. ஈழகேசரி, 1930ஒக்ரோபர்22, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
4. ஈழகேசரி, 1930செப்ரெம்பர்10, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
5. ஈழகேசரி, 1931பெப்ரவரி11, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
6. ஈழகேசரி, 1931ஜூலை08, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
7. ஈழகேசரி, 1931செப்ரெம்பர்30, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
8. ஈழகேசரி, 1931டிசம்பர்23, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
9. ஈழகேசரி, 1932ஜூலை31, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
10. ஈழகேசரி, 1933பெப்ரவரி02, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
11. ஈழகேசரி, 1934ஜனவரி07, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
12. ஈழகேசரி, 1934ஜனவரி07, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
13. ஈழகேசரி, 1934டிசம்பர்30, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

14. ஈழகேசரி, 1935மார்ச்சு17, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
15. ஈழகேசரி, 1935செப்ரெம்பர்01, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
16. ஈழகேசரி, 1936மே31, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
17. ஈழகேசரி, 1937பெப்ரவரி28, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
18. ஈழகேசரி, 1939டிசம்பர்24, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
19. ஈழகேசரி, 1940ஜனவரி21, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
20. ஈழகேசரி, 1940ஜூன்02, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
21. ஈழகேசரி, 1941ஜனவரி26, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
22. ஈழகேசரி, 1942மார்ச்சு29, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
23. ஈழகேசரி, 1943நவம்பர்14, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
24. ஈழகேசரி, 1944மார்ச்சு12, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
25. ஈழகேசரி, 1944டிசம்பர்10, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
26. ஈழகேசரி, 1945ஜூலை08, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
27. ஈழகேசரி, 1946மே19, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
28. ஈழகேசரி, 1946ஜூன்23, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்
29. ஈழகேசரி, 1948ஓகஸ்ட்01, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
30. ஈழகேசரி, 1948செப்ரெம்பர்12, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
31. ஈழகேசரி, 1948செப்ரெம்பர்12, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்
32. ஈழகேசரி, 1949ஜனவரி02, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
33. ஈழகேசரி, 1951ஜூன்24, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
34. ஈழகேசரி, 1951ஓகஸ்ட்26, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
35. ஈழகேசரி, 1953 ஜூலை19, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
36. ஈழகேசரி, 1953ஒக்ரோபர்04, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
37. 37. ஈழகேசரி, 1953நவம்பர்15, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
38. 38. ஈழகேசரி, 1957ஏப்ரல்14, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.